ஆத்மாவை அறியும் வழி



சுவாமி பிரபஞ்சநாதன்

ஓம் தத் சத்!


ஆத்மாவை அறியும் வழி



(பராவித்யா)

சுவாமி பிரபஞ்சநாதன்

ஓம் தத் சத்!



<u>ஆத்மாவை அறியும் வழி!</u>

அறிவை அறிவதற்கு மூன்று விசயங்கள் முக்கியமாகக் கூறப்படுகின்றது.

இதை மாகான்கள் பாமரமக்களுக்கு எளிதில் புரிய வைக்க முடியாது, மற்றும் அவரவர்கள் பிராரப்தம் மனம் போன போக்கில் கொண்டு செல்வதை தடுக்கவும் முடியாது என்பதினால், அவள் அருளாலே அவளை அறியட்டும் என்று பக்தியில் கொண்டு செல்வார்கள்.

பக்தியே ஞானத்திற்கு வழி! அந்த பக்தி பராபக்தியாக இருக்க வேண்டுமே தவிர, மூட பக்தியாக மாறி விடக்கூடாது. அதுதான் மிகவும் முக்கியம்.

புரிந்து கொள்பவர்களுக்காக மட்டுமே இங்கு இதை பராவித்யா - பகிர்ந்து கொள்கின்றது.

அவைகள், **காண்பான், காட்சி, காணப்படும் பொருள்.**

இதில் காண்பவன் யார்?

காட்சியும், காணப்படுகின்ற பொருளும் எப்படி உண்டாகின்றது?

இதனை சிறிய உதாரணத்துடன் விளங்கிக்கொள்ள முயற்சிக்கலாம்.

காண்பவன் - உணர்வு அல்லது அறிவு
காட்சி - மனம்
காணப்படும் பொருள் - காமாட்சி.

காண்பவன் (அறிவு), காட்சியினால் (மனம்) காணப்படும் பொருளாகிய காமாட்சியைக் கண்டதும், அவள் மீது ஆசைப்படுகின்றான். அல்லது பக்தி கொள்கின்றான். (காமாட்சி = காமம் + ஆட்சி).

காணப்படும் பொருட்கள் காமத்தினால் (மனதினால்) ஆட்சி செய்யப்படுகின்றது. அதாவது காமாட்சியினால் ஆட்சி செய்யப்படுகின்றது. **அவளே மாயை.**

இதனால், காண்பவன் (அறிவு) காணப்படும் பொருளின் (காமாட்சியின்) வசம், காட்சியினால் (மனதினால்) மயங்கு கின்றான், அல்லது ஆசைப்படுகின்றான். அல்லது பக்தி செய்கின்றான்.

காண்பவனால் (அறிவால்) தனக்கு வேறாக இருக்கின்ற காணப்படும் பொருளாகிய காமாட்சியைக் கண்டு ஆசைப்படுவதற்கு ஆதாரமாக காட்சி (மனம்) இருப்பதினால், அவனால், அவள்மீது பக்தி செய்யாமல் இருக்க முடியாது.

உண்மையில், காட்சி (மனம்) இல்லையென்றால், காணப்படும் பொருளாக காமாட்சியும் இல்லை.

ஆக, **காண்பவன் யார்?**

காண்பவனை (அறிவு) என்பதினால், அவன் மட்டுமே அனைத்தையும் அறிபவனாகவும் இருக்கின்றான்.

அவனுக்கு வேறாக காட்சி (மனம்) உண்டாவதும், காணப்படும் பொருள் (காமாட்சி) இருப்பதும், எல்லாமே இந்த காண்பவன் (அறிவு) இருப்பதினால்தான்.

அந்த வகையிலே, இந்த காட்சி (மனம்) புறத்தில் விரியும் போது உண்டாகும் உலகக் காட்சிகளும், அகத்தில் விரியும் போது உண்டாகும் அகக் (கற்பனைக்) காட்சிகளும் தோன்றக்காரணமான காண்பவன் (அறிவு) இருப்பதினால்தான் உண்டாகுகின்றன.

அதாவது, காண்பவனை (அறிவை), காட்சியின் (மனதின்) வாயிலாக, காணப்படும் பொருளாகிய காமாட்சியின் மீது பக்திக்கு (ஆசைக்கு) உட்படுத்துகின்றன.

இதற்குக் காரணம், காட்சி (மனம் என்ற ஏற்றி வைக்கப்பட்ட எண்ணங்கள்), காண்பவனை தன் உண்மை நிலையை அறிய முடியாதவாறு மறைத்து, காணப்படும் பொருளாகிய காமாட்சிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வைக்கின்றது.

எவ்வாறு பிரகாசமான சூரியனை சாதாரண மேகங்கள் மறைத்துக் கொள்வதுப் போன்று, இந்த மனம் (காட்சி) நம் அறிவை (காண்பவனை) மறைக்கின்றது.

ஆக காண்பவன் (அறிவு), காட்சியில் (மனதில்), தனக்கு வேறாக உள்ள காணப்படும் பொருளாகிய காமாட்சியை எப்படி அடைவது? அல்லது அனுபவிப்பது?

அடைந்தால் அல்லவா! அனுபவிக்க முடியும்?

ஆகவே, காண்பவன் (அறிவு) காட்சியில் (மனதினால்) காணப்படும் பொருளை (காமாட்சியை) தனக்கு வேறாக நினைத்துக் கொண்டு இருக்கின்றவரை, அவளை அடையவோ, அனுபவிக்கவோ முடியாது.

அதாவது, ஒருவன் தான் அடைந்துள்ள தன் இரண்டு கண்களை, தனக்கு வேறாகப் பார்க்க முடியுமா? என்றால், நிச்சயம் முடியாது.

இல்லைப் பார்த்தே ஆக வேண்டும் என்றால், அதற்கு, அவனுக்கு வேறாக, புறத்தில் முகம் பார்க்கும் கண்ணாடி ஒன்று இருந்தால், அதில் அந்தக் கண்களை காண முடிகின்றது.

அதுப்போன்று, காண்பவனாகிய (அறிவு), தன்னைப் பற்றித் தானே தெரிந்துக் கொள்ள வேண்டும் என்றால், அது நிச்சயமாக முடியவே முடியாது.

அதுவே, தனக்கு வேறாக மனம் என்ற கண்ணாடியைப் படைத்துக் கொண்டு, அதன் வாயிலாகத் தன்னைக் காண முயற்சித்தால், அதில் காண்பனைக் காணலாம்.

அதாவது, கண்கள், தான் காணுகின்ற காட்சியில், காணப்படுகின்ற பொருளாகத் தன்னுடைய கண்களே இருப்பதை தெரிந்துக் கொண்ட பிறகு, தனக்கு வேறாக புறத்தில், முகம் பார்க்கும் கண்ணாடி தேவை இல்லை அல்லவா?

(தன் கண்களை தன்னிடத்திலேயே கொண்டவனுக்கு தனக்கு வேறாக, புறத்தில் கண்களை அடைய வேண்டிய அவசியம் இல்லை.)

அவ்வாறு, காண்பவனாகிய அறிவு, காணுகின்ற காட்சியான மனதில், காணப்படும் பொருளாக தன்னையே (ஆத்மாவை - காமாட்சியை)) கண்டவனுக்கு, **காண்பவனும், காட்சியும், காணப்படும் பொருளும்** ஒன்றே!

ஆகவே, காண்பவன் (அறிவு) காட்சியில் (மனதில்) தனக்கு வேறாக காணப்படும் பொருளை (கல்லோ, கடவுளோ) நினைத்துக் கொண்டிருக்கும் வரை, அதை அடையவோ, அறியவோ, அனுபவிக்கவோ முடியவே முடியாது.

காண்பவனாகிய தான் யார்? என்று தன்னையே தன் அறிவால் அகத்தில் (மனதினாலேயே) விசாரிக்கத் தொடங்கிய உடன் **காண்பவன், காட்சி, காணப்படும் பொருட்கள்** ஆகிய இந்த மூன்றுக்கும் காரணமாக காண்பவனாகிய தானே (அறிவாக) இருப்பது தெளிவாகின்றது.

காட்சியின் (மனதின்) மயக்கத்தால், தனக்கு வேறாகத் தெரிந்த காணப்படும் பொருளாகிய காமாட்சி, அந்த காட்சியை (மனதினை) விசாரிக்கத் தொடங்கியவுடன், அந்த காட்சியானது ஏற்றி வைக்கப்பட்ட எண்ணத்தின் (மனதின்) வெளிப்பாடு, என்பதை அறிந்து, அதனால் தோற்ற மாயையாக காமாட்சி காணப்படுகின்றாள் என்பதைப் புரிந்து, மீண்டும் காண்பவன் தன் மூலத்திற்கே (அறிவுக்கு) திரும்பும் போது, அங்கே காட்சியும், காணப்படும் பொருளும் உண்மையில் இல்லை என்பது (விசாரத்தின் வயிலாக) எளிதாக அறிய முடிகின்றது.

ஆக, **அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள்** என மூன்றும் (திரிபுடி) ஒன்றாக முடிகின்றது.

ஆகவே, தனக்கு வேறாக காணப்படுகின்ற காமாட்சியை அறிந்துக் கொள்வதாக இருந்தாலும் சரி!,

அனுபவிப்பதாக இருந்தாலும் சரி! அவளை அறிகின்ற அரிய வழி! இது ஒன்றே ஆகும்.

இதை விடுத்து, புறத்தில் அவளை (காமாட்சியை), காட்சியாகக் கண்டு, காணப்படும் பொருளாகக் கொண்டு மனம் மயங்கி இருக்கின்றவரை என்றுமே அவளை அறிய முடியாது.

அது, அவரவர்களின் கற்பனையில் கடவுளாக எதை, எதை ஏற்றி வைத்துக் கொண்டுள்ளனரோ, அதை, அதை அவர்களும் கடவுளாக வைத்துக் கொண்டு, சண்டையிட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான், வேறு வழியே கிடையாது.

“அறிவே தெய்வம்”

தன்னை அறிவாக அறியாதவன், காண்பவனான தன்னை அறியாமல், காட்சியின் (மனதின்) வாயிலாக, காணப்படும் பொருளாக (காமாட்சியை), தன் பிரதி பிம்பத்தையே விரும்புகின்றவனாக, (அவளை வழிபடுகின்ற) துவைதியாக (இருமைகள் உடையவனாக) இருக்கின்றான்.

அதுவே, தன்னை அறிந்தவன் **காண்பவன், காட்சி, காணப்படும் பொருள்** ஆகிய மூன்றும் **“நானே”** (அவளே) என்றும், எனக்கு (அவளுக்கு) வேறாக எதுவுமே இல்லை என்றும் எளிதாகப் புரிந்துக் கொள்கிறான். அவனே ஞானி, அவனே ஆத்மா, அவனே சிவம், அவனே எல்லாமுமாக, **‘இருப்பதெல்லாம் இறைவ(நா)னே’** என்று இருக்கின்றான்.

ஓம் தத் சத்!

ஆத்மாவை அறியும் வழி



சுவாமி பிரபஞ்சநாதன்